பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 18 புதன்கிழமை 02.03.2022 கதிர் 117

இனிது ரகசியம் அல்ல!

தமிழரசை ஓரங்கட்டி, மற்ற நான்கு தமிழ்க் கட்சிகளையும் (புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., விக்கியின் கட்சி, சிறிகாந்தாவின் கட்சி ஆகியவற்றை) ஒன்றிணைத்து மாகாண சபைத் தேர்தலில் இறங்கவே துடியாய்த் துடிக்கின்றதுரெலோ என்ற ஒரு தகவலை 2

# இலங்கை மீதான ஜெனிவாவின் கவனமும் கரிசனையும் உக்ரைன் யுத்தத்துக்கு மத்தியிலும் குறையவேயில்லை!

## திருப்தி தெரிவிக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்

(கலையமுதன்)
யாழ்ப்பாணம், மார்ச் 02

உக்ரைனில் கடுமையான போர் நடந்துகொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்திலும் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கவனமும் கரிசனையும் சற்றும் குறையாமல் தொடர்ந்தும் இருக்கின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உடுப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிரான – கையெழுத்துப் போராட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 10 வருடங்களை மீளத் திரும்பிப் பார்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை மீதான மனித உரிமைகள் கவுன்ஸிலின் கரிசனை 9



## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பீரிஸ் விசனம்

# ஜெனிவாத் தீர்மானங்களால்தான் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பாம்!



## போர்க்குற்றச் சாட்சியங்களைச் சேகரிக்கும் பொறிமுறையையும் கடுமையாகச் சாடுகிறார்

ஜெனிவா, மார்ச் 02

இலங்கையில் போர்க்குற்றங்கள் குறித்த சாட்சியங்களைச் சேகரிக்கும் பொறிமுறை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தைக் கடுமையாகச் சாடியுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் இத்தகைய தீர்மானங்களினால்தான் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவது பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அங்கு விசனம் தெரிவித்துள்ளார். 9

## சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தவே ஜெனிவாவுக்குத் தனியான கடிதமாம்!

### ஐந்து தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு அது என்கிறார் சிவாஜி

(கலையமுதன்)
யாழ்ப்பாணம், மார்ச் 02

தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் ஜெனிவாவுக்கு தனியாக கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கட்சிகள் ஒவ்வொன்றும் தனியாக ஜெனிவாவிற்கு 9



## இலங்கை பற்றிய ஆராய்வு ஜெனிவாவில் தள்ளி வைப்பு

ஜெனிவாவில், மார்ச் 02

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையின் மீதான விவாதம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி நாளை 03ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறாது. அது நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு எனத் 2

## மீண்டும் இன்றும் நாளையும் தாதியர்கள் வேலை நிறுத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

இன்றும் நாளையும் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. 2

## பரமேஸ்வராச் சந்தி விபத்தில் ஒருவர் சாவு; மூவர் படுகாயம்!

### இன்று அதிகாலை நடந்த விபரீதம்



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்ச் 02


யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் இன்று அதிகாலை இடம்பெற்ற 2

## ‘வைக்கியூம்’ குண்டுகளை வீசித் தாக்குகிறதாம் ரஷ்யா



ரஷ்யா உக்ரைன் மீது ஒக்சிஜனை உறிஞ்சி வெடிக்கும் vacuum (வெற்றிட)குண்டுகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதாக 9

## உக்ரைன், ரஷ்ய பயணிகளின் விசா இரு மாத காலம் நீடிப்பு



இலங்கையிலுள்ள உக்ரைன் மற்றும் ரஷ்ய நாட்டு பிரஜைகளுக்கு விசா செல்லுபடியாகும் காலம் மேலும் 9



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுக் கோடி காட்டியிருந்தேன்.

அதுகுறித்து நேற்று தொலைபேசியில் பலர் என்னுடன் உரையாடினர். இனி விடயத்துக்கு வருவோம்.

மாகாண சபைத் தேர்தலை – குறைந்த பட்சம் வடக்கு மாகாண சபைத் தேர்தலையாவது – விரைந்து நடத்துவது அரசுத் தலைமையின் எண்ணம். அரசுத் தலைமையுடன் ஊடாடக் கூடிய ரெலோத் தரப்புகளுக்கு அது கோடி காட்டப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினாலும் அதன் முதலமைச்சர் பதவி தமிழரசிடமோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற தரப்பிடமோ போகக் கூடாது என்பது அரசுத் தலைமையின் ஏக விருப்பம். அதற்கான வலைப் பின்னல்களே இப்போது கூட்டமைப்புக்குள் கட்டவிழ்கின்றன. தமிழரசை ஓரங் கட்டும் ரெலோ – புளொட் அந்நியோன்னியம் இந்தப் பின்புலத்தின்தான் இணைக் கப்பட்டிருக்கின்றது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் கூட்டமைப்பைக் குழப்பியடிப்பதுதான் ரெலோ பிரகிருதிகளின் திட்டம். அந்த சதி வலைப் பின்னலுக்கு துணை போகின்றது புளொட். அவ்வளவுதான்.

தமிழரசையும் இணைத்துக் கூட்டமைப்பாக நின்றால், கடைசி வரை முதல்வர் வேட்பாளர் பதவியை தங்களுக்கு தமிழரசு விட்டுத்தராது என்பது ரெலோவுக்கும் புளொட்டுக்கும் நூற்றுக்கு இருநூறு வீதம் உறுதியாகத் தெரியும். வெளியில் இருந்து முன்னர் நீதியரசர் விக்னேஸ்வரனைக் கொண்டு வந்த மாதிரி – யாரையும் தமிழரசு முதல்வர் வேட்பாளராகக் கொண்டு வர தமிழரசு இணங்கினாலும் கூட, அந்த வாய்ப்பை ரெலோவுக்கோ, புளொட்டுக்கோ விட்டுத் தராது என்பது ரெலோ தரப்பில் புதிதாக முளைத்து, இப்பதவிக்குக் கண் வைத்திருக்கும் தரப்புகளுக்குத் தெரியும்.

அதனால் மாற்றுத் தந்திரோபாயத் திட்டத்தை வகுத்து, அவை சாணக்கியமாகச் செயற்பட முனைகின்றன.

கூட்டமைப்பாக ஒன்றுபட்டுக் கேட்டாலும் இந்தத் தடவை தனித்து ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையை – 19 மாகாண சபை உறுப்பினர்களை – கூட்டமைப்பு தனித்துப் பெற்றுக் கொள்ள மாட்டாது என்பது அவர்களது கணிப்பீடு. தொங்கு மாகாண சபையே வரும் என்பது அவர்கள் கணக்கு. அது ஓரளவுக்கு இன்றைய நிலைவரப்படி சரியான மதிப்பீடுதான்.

அப்படித் தொங்கு மாகாண சபை வந்தால் தெற்குத் தரப்புகளுக்கு ஆதரவான கட்சிகளின் உறுப்பினர்களையும் வளைத்துப் போட்டு ஒரு மாகாண நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் தாற்பரியம் தங்களின் பிரமுகரிடம்தான் இருக்கின்றது என ரெலோ தரப்புக் கருதுகின்றது. ஆனால் தமிழரசையும் சேர்த்துக் களத்தில் இறங்கினால் அந்த வாய்ப்பைத் தமிழரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு விட்டுத் தராது என்பதால் மாற்று வழிக்கு வியூகம் வகுக்கின்றது ரெலோவின் மூளை.

தமிழரசை விட்டு மற்றைய ஐந்து கட்சிகளையும் ஒன்றிணைத்துக் களத்தில் இறங்கினால், அந்தப் பக்கத்தில் ஐந்து எம்.பிக்கள் இருப்பர் (ரெலோவிடம் மூன்று, புளொட் மற்றும் விக்கி தரப்பிடம் தலா ஒன்று). அத்தகைய பின்னணியில், அந்தக் கூட்டில் அதிக எம்.பிக்களை கொண்டவலுவானகட்சிதங்களுடையதே என்று காட்டி மாகாண முதல்வர் வேட்பாளர் பதவியை தமதாக்கிக் கொள்ளலாம் எனக் கணக்கிடுகின்றது ரெலோ.

தமிழரசையும் சேர்த்துக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டாலும் சரி –

ஏனைய நான்கு கட்சிகளையும் சேர்த்து ஐந்து கட்சியாகப் போட்டியிட்டாலும் சரி –

தனித்து ஆட்சியைப் பிடிக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாது என்பது ரெலோவுக்குத் தெரியும்.

எனினும், தமிழரசு தனித்துத் தேர்தலில் நின்றாலும் அதற்கும் தனித்து அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது, தமிழரசு – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டும் சேர்ந்தும் அரசமைக்கும் வாய்ப்பு வராது என்று ரெலோ எண்ணுகின்றது.

இத்தகைய தொங்கு மாகாண சபையில் எஞ்சியிருக்கக் கூடிய தென்னிலங்கை மற்றும் தமிழ், முஸ்லிம் தரப்புக்களை சேர்த்துக் கட்டி, ஒன்றிணைத்து, ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் திறமை தன்னிடம் இருப்பதாகவும், அதற்கான வாய்ப்பும் தனக்கே கிட்டும் என்றும் கணக்கிட்டு ரெலோ காய் நகர்த்துகின்றது.

அப்படி பல தரப்புகளை ஒன்றிணைத்து ஆட்சி நிர்வாகத்தை அமைப்பதற்கு ராஜபக்ஷக்களில் ஒருவரின் முழுப் பின்னணி ஒத்துழைப்பும் கூட ரெலோவுக்குக் கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அத்தகைய தொடர்புடையோரின் இயக்கத்தில்தான் ரெலோ இப்போது உள்ளது.

ஈ.பி.டி.பி. மற்றும் அங்கஜனின் கட்சி போன்றவற்றில் தெரிவு செய்யப்படக் கூடிய மாகாண சபை உறுப்பினர்களையும் அந்த ராஜபக்ஷ மூலம் வளைத்துப் போடும் செல்வாக்கு அந்த ரெலோ பிரகிருதிக்கு இருக்கும் என்பதும் நம்பத் தகுந்த செய்திதான்.

அறுதிப் பெரும்பான்மை இல்லாமல், யாழ்.மாநாகர சபையை மணிவண்ணன் குழு இரண்டாம் வருடமாக – வெற்றிகரமாக – நிர்வகித்து வருகின்றமை போல –

தமிழரசை வெட்டி விட்டு, ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து ஐந்து கட்சி கூட்டமைப்பாக ('தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற பெயரைக் கூட பயன்படுத்தும் திட்டம் இருக்கலாம்) மாகாண நிர்வாகத்தைக் கையாளலாம் என்பது ரெலோவை இன்று கையில் போட்டு ஆட்டும் தரப்புகளின் திட்டம்; கனவு; நம்பிக்கை; உத்தேசம்; எல்லாமுமே.

தமிழரசையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் ஓரங்கட்டி ஒதுக்கி விட்டு, வேறு ஒருவர் – தங்களின் 'முன்னாள் கையாள்' ஒருவர் – வடக்கு முதல்வராக வருவதை ராஜபக்ஷக்களும் விரும்புவார்கள்.

இதில் இரண்டு விடயங்கள் உண்டு.

ஒன்று – இந்த சதித் திட்ட வியூகத்தின் பின்னால் புதையுண்டுள்ள இரகசியம் – தாற்பரியம் – புரியாமல், தமிழரசை விழுத்துகிறோம், அது சந்தோஷம் என்று எண்ணிக் கொண்டு, விக்கி, சுரேஷ், சிறிகாந்தா போன்றோர் இத்திட்டத்துக்கு நிச்சயம் துணை போவார்கள்.

அடுத்தது – கல்லைக் கட்டிக் கொண்டு நீந்துவது போல மற்றைய இரண்டு முன்னாள் ஆயுதக் குழுக்களையும் சேர்த்து மல்லுக் கட்டிக் கொண்டு அல்லாடும் தமிழரசு, அந்த இரண்டு கற்களையும் கழற்றி விட்டால் சுயாதீனமாக, சுதந்திரமாக, வேகமாக, கட்டுப்பாடின்றி தமிழர் அரசியலில் நீச்சலடித்து முன்னேறும் சூழ்நிலை ஏற்படும்.

இதற்குள் இன்னும் ஆழமாக – பல சூக்குமங்கள், சூழ்ச்சிகள் பற்றிய – தகவல்கள் உண்டு. காலம் வரும் போது கட்டவிழ்ப்பேன். காத்திருங்கள்.

– மின்னல் –

## மீண்டும் இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில், யாழ்.போதனா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேலை நிறுத்த காலத்தில் அவசர மற்றும் உயிர் காக்கும் சேவைகளில் மாத்திரமே தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுவார்கள் என அறிவித்துள்ளனர்.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7ஆம் திகதி முதல், 9 நாள்களுக்கு தாதியர் உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தகைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவு ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தற்போது பிற்போடப்பட்டுள்ளது.

நாளை உக்ரைன் நிலைவரம் தொடர்பான விடயம் ஆராயப்பட தீர்மானிக்கப்பட்டதால் இலங்கை விவகாரம் வெள்ளி மாலைக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளி மாலையும் ஏதேனும் காரணத்துக்காக அது தள்ளிப் போடப்பட்டால் அடுத்த திங்கட்கிழமை 07ஆம் திகதி – இலங்கை விவகாரம் எடுத்துக் கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது.

## பரமேஸ்வராச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த அதேநேரம் மூவர் படுகாயமடைந்தனர்.

பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் இன்று அதிகாலை 12 மணியளவில் மோட்டார் சைக்கிளை திருநெல்வேலிப் பகுதியில் இருந்து வந்த மகேந்திரா வாகனம் மோதித் தள்ளியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்த அதேநேரம் மேலும் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளமையோடு மகேந்திராவில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞர் கோண்டாவிலைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு வரும் கோப்பாய் பொலிஸார் விபத்துடன் தொடர்புபட்ட வாகனங்களை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றுள்ளனர்.

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.



அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
கனடா & நோர்வே - Rs.1650
சுவிஸ் - Rs.1550
075 330 5500, 070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 076 306 8091

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரச தீர்மானங்களின் கதி!

தெளிவான கொள்கை இல்லாத இந்த அரசாங்கத்தின் பல நடவடிக்கைகள் ஏதோ ஒரு திட்டம் அல்லது நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டாலும் முடிவில் அவை வேறு விதமாக அமைந்து விடுவது நாட்டின் துரதிர்ஷ்டம். பல சமயங்களில் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாகி விடுகின்றன விடயங்கள்.

உதாரணத்துக்கு இரண்டு விவகாரங்களை நோக்கலாம்.

ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியை அதன் சுயாதீனப் போக்குக்குக் கணிப்பிட விடாமல் – அதாவது மிதக்க விடாமல் – தான் நிர்ணயித்த பெறுமதியில் அதை இழுத்துப் பிடித்து வைத்திருக்க முயற்சித்தது கொழும்பு. கடைசியில் அதனால் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம்தான் அதிகம்.

டொலரின் பெறுமதியை 201 முதல் 203 ரூபாவுக்குள் செயற்கையாகப் பேணி, அந்தளவில் கணக்கிட்டுத் தனது பரிமாற்றங்களை அரசும், மத்திய வங்கியும், அதன் கீழ் இயங்கும் வங்கிகளும் அமைப்புகளும் கையாண்டன. அதனால் அவற்றின் ஊடான பரிமாற்றங்கள் படுத்து விட்டன. வெளியில் – புறச் சந்தையில் 250 முதல் 260 ரூபா வரை டொலரின் பெறுமதி கணக்கிடப்படும் போது, நாட்டுக்குள் டொலரை எடுத்து வர விரும்பும் யாராவது அரச வங்கிக் கட்டமைப்புக்குள் – அந்தக் குறைந்த பெறுமதிக் கணிப்பில் – அதைச் செய்ய முயற்சிப்பார்களா? புறச் சந்தையில்தான் அதை ரூபாவாக மாற்றுவார்கள். அதேசமயம், நாட்டில் இருந்து ரூபா மூலம் வெளிநாட்டுக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் எல்லோருமே குறைந்த விலையில் அதைச் செய்ய அரச வங்கிப் பரிமாற்றத்தையே விரும்புவர். அதனால் அந்த விடயத்துக்கு அவர்கள் மட்டுமே அரச வங்கிப் பரிமாற்றத்தை விழுந்தடித்து நாடுவர்.

அதனால் இரட்டைப் பாதிப்பு. அந்நிய செலாவணி வருமான இழப்பும், மறுபுறத்தில் இருக்கும் அந்நிய செலாவணியும் விரைந்து கரைந்து போகும் நெருக்கடியும். இந்த இரண்டும் சேர்ந்தமையால் அந்நிய செலாவணி முற்றாகக் கரைந்து அரசும், நாடும், மக்களும் பரிதவிக்கும் நிலைமை.

வெளிநாட்டில் இருப்போர் அங்கிருந்து உழைத்து அந்தந்த நாட்டு நாணயங்களில் இலங்கைக்கு அனுப்பும் பணம் மூலம் கிடைத்த அந்நிய செலாவணி கடந்த 13 ஆண்டுகளில் மிக மோசமான கட்டத்தை கடந்த டிசெம்பரில் எட்டியிருக்கின்றது. அதற்குக் காரணம் யதார்த்தத்தில் சாத்தியப்படாத மட்டத்தில் டொலரின் பெறுமதியை மத்திய வங்கி இழுத்துப் பிடித்து வைத்திருப்பதுதான். கடந்த ஜனவரியில் கூட வெளிநாட்டில் இருப்போர் உழைத்து அனுப்பிய நிதியின் அளவு 67 கோடி 50 லட்சம் டொலராக இருந்தது. அது கடந்த டிசெம்பரில் சுமார் 26 கோடி டொலராக – ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாக – குறைந்து விட்டது.

மக்கள் பாதிப்படையக் கூடாது என்பதற்காக எரிபொருள் தட்டுப்பாடுக்கு – பற்றாக்குறைக்கு – மத்தியிலும் அதன் விலையை மீண்டும் அதிகரிக்க அரசு அனுமதிக்கவில்லை. ஆனால் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத லங்கா இந்தியா ஒயில் கம்பனி தன்பாட்டில் விலை அதிகரிப்பை முன்னெடுத்து விட்டது. அதன்படி, இப்போது அரச கட்டுப்பாட்டில் உள்ள ‘சிப்பெட்கோ’ எரிபொருள் நிலையங்களை விட பெற்றோல் லீற்றருக்கு 27 ரூபாவும், டீசல் லீற்ற ருக்கு 18 ரூபாவும் கூடிய விலையில் அது விற்கின்றது.

அதன் காரணமாக சிப்பெட்கோ நிலையங்களை பாவனையாளர்கள் முற்றுகையிட்டு வருகின்றனர். ஏற்கனவே போதிய எரிபொருள் கையிருப்பில் இல்லாமல் தடுமாறும் அரச தரப்பு, இப்படி அலை மோதும் கூட்டத்தைச் சமாளிக்க முடியாது பல இடங்களிலும் விநியோகத்தை முற்றாக நிறுத்தும் கட்டத்துக்கு வந்து விட்டடது.

இந்த அரசின் முடிவுகள், தீர்மானங்கள் இப்படித்தான் பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்த கதையாகிக் கொண்டிருக்கின்றன.

# அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களை மீட்க ஜனநாயகப் போராட்டம் நடத்துவோம்!

## மாவை அறைகூவல்



அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நாங்கள் இப்போது தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகளுக்கு பின்னர் ஆனாலும் நாங்கள் ஏற்கனவே எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எங்கள் மத்தியில் இயக்கத்தை முன்னெடுத்திருக்கின்றோம்.

நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது எங்களுடைய நிலம், நாங்கள் எங்களை ஆள வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்க வேண்டும். அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் அடிப்படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங்களவர்களைக் குடியேற்றுவது, அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களுடைய நிலங்கள் பறிக்கப்படுகின்றமை. அதனைவிட பறிக்கப்படுவதற்கு சமமாகவும், அதற்கு அப்பாலும் இராணுவங்கள் லட்சக் கணக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பவர்கள். பல ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் எங்களுடைய பிரதேசங்களில் கைப்பற்றப்பட்டு வந்திருக் கின்றது. இவற்றையெல்லாம் நாங்கள் மதிப் பீடு செய்யப்போகின்றோம்.

நிலத்தினுடைய விடுதலைக்காக – விடிவிற்காக – அதனை நாங்கள் உறுதிப்படுத்துவதற்காக – எங்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு – எங்கள் மண்ணை நாங்கள் ஆளுவதற்கு – நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்.

இன்று அரசினாலும், இராணுவத்தினாலும் தொடர்ந்தும் பல காரணங்களைக் கூறிக் கைப்பற்றப்படுகின்ற நிலங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி எங்களை சிறுபான்மையானவர்களாக – சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியற்றவர்களாக – நாங்கள் எங்கள் அரசியல் உருத்தைக் கோருவதற்கு எங்களைத் தகுதியற்றவர்களாக – ஆக்குகின்ற மிகக் கொடிய போராட்டத்திலே மிகப் பெரிய திட்டத்தோடு இன்றைய அரசாங்கமும் ஒவ்வொரு நாளும் அந்த நிலைமைக்கு அவர்கள் ஈடுபட்டு வருகின்றமையோடு, அதற்கு நாங்கள் முகம்கொடுத்து பலவிதமான நெருக்கடிகளை நாங்கள் ஜனநாயக ரீதியில் நிலத்தை பாதுகாக்கப் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

எமது மக்களைப் பாதுகாக்கலாம் என்பதற்காக ஒரு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்ற இலங்கை, சர்வதேச சூழ்நிலையில் நிலம் ரீதியாக முழுமையான விவரங்களையும், வரைபடங்களையும் மக்கள் இழந்திருக்கிறார்கள், மக்கள் தங்களுடைய நிலத்தை எவ்வளவு இழந்திருக்கிறார்கள் அந்த நிலங்களைப் பாதுகாக்கவும், பறிக்கப்பட்ட, அபகரிக்கப்பட்ட, இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நாங்கள் மீட்டெடுப்பதற்காகவும் விரைவில் தமிழரசுக்கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது.

அடுத்த வாரத்தில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூகுள் மப் அடிப்படையில் எவ்வளவு நில வரைபடங்களை கொண்டுள்ளது. அதற்கு பின்னர் எவ்வளவு நிலங்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். இராணுவம் எவ்வளவு நிலங்களைக் கைப்பற்றியிருக்கின்றது, அந்த நிலங்களில் தாங்கள் குடியுரிமை கொண்டுள்ளவர்களாக, உரித்துடையவர்களாக, அங்கே பண்ணைகளை வைத்திருப்பதும், விவசாயத்தைச் செய்வதும், தொழில் பேட்டைகளை அமைப்பதும் இவ்வாறு வடக்கு, கிழக்கு முழுவதும் சிங்களவர்களைக் குடியேற்றுவது மட்டுமல்ல இராணுவமே குடியேற்றப்பட்டவர்களாக எங்களுடைய நிலங்களைக் கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் சர்வதேசத்துக்கு முன்னால் முன்வைப்பது மட்டுமல்ல ஜனநாயக ரீதியாக இந்த நாட்டுக்குள்ளும், வெளியிலும் புலம்பெயர்ந்தவர்களும் நிலத்தை மீட்பதற்காகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநாட்டிலே உரிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றோம். – என மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளை இம்மாதம் சந்திக்கின்றார் பஸில்!



சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், அவற்றின் வருடாந்த கூட்டத்தொடரை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே நிதி அமைச்சர், மேற் படி நிறுவனங்களின் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பேக்கரி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு!

பேக்கரி உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பேக்கரி உற்பத்திக்குத் தேவையான கோதுமை மா, வெண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் பாமொயில் போன்ற மூலப்பொருள்களின் தட்டுப்பாட்டால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். டொலர் தட்டுப்பாடு காரணமாகவே மூலப்பொருள்களை இறக்குமதி செய்யமுடியவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இன்னும் ஒரு மாத காலத்துக்கு பேக்கரித் தொழிலை முன்னெடுத்துச் செல்வதே சவாலாக மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘இறைவன் எனக்களித்த வரமே இந்த அழுக்கலை”

**Salon Diya அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் தியானி நவாவின் நேர்காணலிது.**

### ➢ உங்களைப் பற்றிய அறிமுகம்

என் பெயர் தியானி நவா. Salon Diya அழகுக் கலை நிறுவனத்தின் உரிமையாளர். நான் விரும்பி செய்யும் தொழில் அழகுக்கலைத் துறைதான். அதுவே என் காதலும் கூட. எனது க.பொ.த சாதாரண தர கற்கையை பூர்த்தி செய்த பின்னர் மாணவர்களுக்கு வகுப்புகள் நடாத்தி கிடைத்த பணத்தை கொண்டு அழகுக்கலைத்துறையை கற்றேன். கிட்டதட்ட 6 வருடங்கள் இந்த அழகுக்கலைத்துறையில் பயிற்சிபெற்று இன்னும் இதிலிருக்கும் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு என்னை மேலும் பலப்படுத்துகிறேன். வெறுமனே ஒரு பெண்ணை மட்டும் அழகு படுத்திக் காட்டாமல் ஆண்களையும் அழகுபடுத்தும் திறமை எனக்கிருக்கிறது. என்னுடைய திறமையைக் கொண்டு விடா முயற்சிசெய்து எப்படியாவது எதிர்காலத்தில் ஒரு அழகுக்கலை கற்கை நிறுவனத்தை ஆரம்பிக்கவேண்டுமென்பதே எனக்கிருக்கும் குறிக்கோளாகும். நான் கற்றுக்கொண்டதை எனது அனுபவங்களை என்னைப்போல் அழகுக்கலைத்துறையில் ஆர்வம் காட்டும் பெண்களுக்கு கற்றுத் தருவது எனக்கு மிகவும் பிடிக்கும். ‘கற்றது கையளவு.. கல்லாதது உலகளவு..” என்று பெரியவர்கள் கூறுவதுண்டு. அதுபோலத்தான் இந்த அழகுக் கலையும். நாம் கற்றுக் கொள்ள வேண்டியது இன் னும் ஏராளம். வாழ்நாள் முழுவதும் அதைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது தான் என்னுடைய நோக்கம்.

### ➢ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

அழகுக் கலைத் துறையில் எனக்கு எப்படி ஆர்வம் வந்ததென்று கூறுவதை விட அழகுக் கலையென்பது இறைவன் எனக் களித்த வரமென்றே கூறவேண்டும். அழகுக் கலைத்துறையில் எனக்கிருக்கும் திறமைதான் என்னை இன்னும் பலவற்றை கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. சிறுவயதிலேயே மற்றவர்களை அழகுப்படுத்தி பார்ப்பது எனக்கு பிடிக்கும். அப்போது அவர்கள் புன்னகைப்பதை பார்க்கும்போது ஒருவித மகிழ்ச்சியாக இருக்கும். இப்போதும் நான் அதை எனது வாடிக்கையாளர்களின் மூலம் உணர்கிறேன். பணத்தை எதிர்பார்த்து அழகுக்கலைத்துறையில் எனக்கு ஈடுபாடு வரவில்லை. நான் செய்யும் இந்த தொழிலை அணுஅளவும் ரசித்து விரும்பி செய்கிறேன். அழகுக்கலைத்துறையை விட்டு பணத்திற்காக வேறு அலுவலக வேலைகளைச் செய்வது எனக்கு பிடிக்கவில்லை. நான் காதலிக்கும் இந்த துறையில் நிறைய கற்றுக்கொண்டு பல சாதனைகளை செய்வதில் தான் எனக்கு ஆர்வம் அதிகம்.

### ➢ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அழகுக்கலைத்துறையில் கிடைக்கும் வாய்ப் புகளை தான் என் பார்வையில் சவாலாகத் தோன்றுகிறது. என்னைப் போன்ற அழகுக் கலை நிபுணர்களுக்கு சாதிக்க கிடைக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவுதான். இப்படி அரிதான வாய்ப்புகளுக்கு மத்தியில் அந்த வாய்ப்புகளை நாமே உருவாக்கிக் கொள்வதில் தான் உண்மையான சவாலே இருக்கிறது.



தியானி நவாவின்
உரிமையாளர்
Salon Diya அழகுக்கலை நிறுவனம்

### ➢ அழகுக் கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் சாதிக்க வேண்டு மென்ற ஒரு வெறி எப்போதும் என் மனதில் புதைந்திருக்கும். அப்படியிருக்க எனக்கு கிடைக்கும் சிறு வாய்ப்புகளைகூட நான் புறக்கணிப்பதில்லை. சிறு வாய்ப்பையும் பெரிய வாய்ப்பாகவே நினைக்கிறேன். National Award போட்டியில் நான் பங்குபற்றி இருக்கிறேன். Ms. Sri Lanka மற்றும் Mrs. Sri Lanka இல் ஒப்பனையாளராக பங்குபற்றி இருக்கிறேன். தற்போது Album Songs களிலும் ஒப்பனையாளராக இணைந்திருக்கிறேன். ஆனால் இவற்றிற்கு மேடையேறியதில்லை. ஆனால் 2022 ஆம் ஆண்டு அருந்ததி நிறுவனத்தின் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக்காட்சி எனக்கந்த வாய்ப்பபை பெற்றுத்தந்தது. பிரம்மாண்டமான மணப் பெண் அலங்காரக் காட்சியில் பங்குகொள்ளும் வாய்ப்பையும் முதன் முதலில் மேடையேறிய அனுபவத்தையும் பெற்றுத்தந்த அருந்ததி நிறுவனகுழுவிற்கு இவ்விடத்தில் நன்றிகூற நான் கடமைப்பட்டுள்ளேன். அழகுக் கலைத் துறையில்நான்சாதிக்கவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. என்னுடைய இந்த நேர் காணலும் அதை நீங்கள் படித்து என்னை தெரிந்து கொள்வதையும் சாதனை யொன்றாகவே பார்க்கிறேன். எனது சிறுவயதிலிருந்தே என்னுடைய தந்தை ‘ நீ ஒரு சாதனைப் பெண்ணாக வரவேண்டும்” என்று அடிக்கடி கூறுவார். அவருடைய அந்த கனவை நனவாக்க எப்போதும் நான் உறுதியாக இருக்கிறேன்.



### ➢ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

பெண் என்றாலே சாதிக்க வேண்டியவள் தான். ஏனென்றால் ஒரு ஆணைவிட மனதளவிலும் உடல் அளவிலும் அவர்கள் வலிமையானவர்கள். சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியபோதே இந்த சமூகத்தில் பெண்கள் நிறைய பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கவேண்டும். எந்த துறையுமே பெண் களுக்கு அத்துபடி தான். பெண்களாக நாமிருப்பதை பெருமையாகவே நினைக்கவேண்டும். சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு பயமிருக்க கூடாது. தன்னம்பிக்கையும், சாதிக்க வேண்டுமென்ற வெறி இருக்கவேண்டும். நீங்கள் நீங்களாகவே இருக்கவேண்டும். மற்றவர்களுக்காக உங்கள் திறமைகளை மூடிவைக்காமல் அவற்றை வெளிக்கொணர்ந்து சாதிக்கவேண்டும்.
‘போராடு தோழியே!சரியான பாதை சரியான நேரத்தில் சரியான வழியில் உனைத்தேடி வரும். பாரதி கண்ட புரட்சிப்பெண்களும் நாம் தான். புதுமைப்பெண்களும் நாம் தான்”.





காலைக்கதிர் Kalaikkathir

# ரவிராஜ் படுகொலை வழக்கை இலங்கை அரசு கையாளவில்லை!



## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

இலங்கையில் ரவிராஜ் கொலை வழக்கை இந்த அரசாங்கம் கையாள வில்லைஎனவும்நீதியை வழங்கவில்லை எனவும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு -

கிருசாந்தியினுடைய கொலை வழக்கு நீதி இன்னும் சரியாகக் கிடைக்க வில்லை. பயங்கரவாதத் தடுசட் டத்தை பழிவாங்குவதற்கான சட்டமாக அரசாங்கம் பயன்படுத்துகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர் களை ஒழிப்பதற்காக அவர்கள் மீது ஏவப்பட்ட மிகக் கொடூர மான ஒரு சட்டமாகவே அமைந்திருக்கிறது.

அதனால் தான் நாங்கள் பல்லாயிரக்கணக்கான இளை ஞர்களை இந்த மண்ணிலே இழந்திருக்கின்றோம். பல ஆயிரக்கணக்கான மக்களை இழந்திருக்கின்றோம். பல்லா யிரக்கணக்கான மக்களின் சொத்துக்களை இழந்துள் ளோம். எமது மண்ணில் மாவீரர்களை நினைவு கூற முடியாதவர்களாக - எமது உறவுகளைநினைக்க முடியாதவர்களாக - எங்களுக்காகப் போராடிய சங்கிலிய மன்னன், பண்டாரவன்னியன், அக்கராயன் மன்னன் ஆகியோரை நினைக்க முடியாதவர்களாக - பயங்கரவாத தடுப்புச் சட்டம் எங்கள் மீது பாய்கிறது. எதற்கெடுத்தாலும் பயங்க ரவாதத் தடுப்புச்சட்டம் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்கள் இன்றும் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்தத்துக்கு பிற்பாடும் பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளார் கள். என்னுடைய காரி- யாலத்தில் கூட 2013 ஆம் ஆண்டு இலங்கைப் படைகளால் கைக்குண்டுகள், குண்டு செய்கின்ற பொருள்கள்கொண்டுவந்துவைக்கப்பட்டு எமது காரியாலயத்தில் இருந்தவர்கள் பயங் கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 மாதங்கள் கேட்பார் இல்லாமல் விசாரணையின்றி இருந்தார்கள். ஆகவே, இந்தக் கொடூர மான பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் இலங்கையில் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களது ஏகோபித்த குரல்.

ஓர் உலகம் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், மனித சாச னங்களையும் மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் அந்த உரிமைகளையும், சாச னங்களையும் மீறி இலங்கையினுடைய இந்தக் கொடூரமான சட்டம் எங்கள் மீது தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தை நீக்குமாறு மேற் கொள்ளப்படும்போராட்டம்தொடர்ச்சியாக இன்னும் பல வடிவங்களில் மேற்கொள் ளப்பட்டு இந்தச் சட்டம் நீக்கப்படும் வரை எங்களது நடவடிக்கைகளை மேற் கொள்வோம்.

அண்மையில் கூட இந்தப் பயங்க ரவாதத் தடுப்புச்சட்டத்தைப் பயன்படுத்தி பல கொலைகள், கொள்ளைகளில் ஈடு பட்ட ஈ.பி.டி.பியினுடைய நெப்போலி யன், மதன்ராஜன் போன்றவர்கள் கூட தப்பி ஒரு நாட்டுக்கு சென்று அங்கு ஒழித்திருக்கின்ற காலத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இன்ரபோல் பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசன் அன்று அறுப்பான் இறைவன் நின்றறுப்பான் என்பதற்கு ஏற்ப ஒரு நியாயம் அந்த நாட்டிலே கிடைத்திருக் கிறது. அந்த நாடு அதனைச் சிந்திக்கிறது.

அதேபோல் இலங்கையில் ரவிராஜ் கொலை வழக்கை இந்த அரசாங்கம் கையாளவில்லை. நீதியை வழங்க வில்லை. கிருஷாந்தியினுடைய கொலை வழக்கு நீதி இன்னும் சரியாகக் கிடைக்க வில்லை. திருகோணமலையில் விரு லக்சன் என்ற மாணவன் கைது செய்யப் பட்டு நீண்ட நாள்கள் தடுத்து வைக்கப் பட்டு தற்போது தான் விடுவிக்கப்பட்டான். இவையெல்லாம் எமது கண்முன்னே நடைபெறுகின்ற சம்பவங்கள்.

அரசாங்கத்துக்கு வேண்டியவர்கள், அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஆகியோர் யாரையும் பழிவாங்க வேண்டும் என் றால் அதற்காக அவர்கள் பயன்படுத்து கின்ற சட்டமாக, அரசாங்கம் பழிவாங்கு வதற்கான ஒரு சட்டமாக இதனை வைத் திருக்கிறது. எனவே, இதனை நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.





# கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடர் யாழில் கோலாகலமாக ஆரம்பம்!

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதமரின் இணைப்பு செயலாளர் கீதநாத் காசிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமையுடன் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் முரளிதரன் மற்றும் யாழ் பிரதேச செயலாளர் சுதர்சன், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தின் தலைவர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதற்கு RS Auto Pvt Ltd மற்றும் Lanka Wings Pvt Ltd நிறுவனங்கள் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்று போட்டியின் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதி களில் நடைபெறவுள்ளன.

# ஊடகங்களிடம் கூட்டமைப்பு தெரிவித்த கருத்து வேடிக்கை!

## திலீபன் எம்.பி. கிண்டல்



நடமாடும்சேவை மேடையில் இருக் கும்போது எமது திட்டத்தை சிறந்த திட்டம் எனப் புகழ்ந்து எம்முடன் இணைந்து உறுதிப் பத்திரங்களை வழங்கி விட்டு ஊடகங்களிடம் இந்தத் திட்டம் பயனற்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியமை வேடிக்கை யாகவுள்ளது என வவுனியா மாவட்ட அபி விருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் பன் முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 45 குடும்பத்தினருக்கு தையல் இயந்திரம், ஆடு மற்றும் கோழி வளர்ப்பிற்கான பணம், விவசாயத்துக்காக மோட்டார் மற்றும் வேலி முள்ளுக்கம்பி, சமையல் உபகரணங்கள், சலூன் உபகரணங்கள், பிரிண்டர், வாகன திருத்தும் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு -

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டலில் வவுனியா மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். நாட்டில் கொவிட் தாக்கம் இருந்தாலும் எமது மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் எமது அரசாங்கம் பின்நிற்கவில்லை.

மக்களது பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி பல வேலைத்திட் டங்களை முன்னெடுத்து வருகின் றார். வவுனியா பல்கலைக் கழகத்துக்கு ஜனாதிபதி வருகை தந்த போது காணிப் பிரச்சினை, வன திணைக்களப் பிரச்சினை தொடர்பில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இதனைத் தீர்ப்பதற்காக நடமா டும் சேவை நடைபெற்றது.

இதில், வேடிக்கையான விடயம் என்னவென்றால், நடமாடும் சேவை மேடை யில் வீற்றிருந்து மக்களுக்கான காணிப் பத்திரங்களை எம்முடன் இணைந்து வழங்கிவிட்டு, அந்த மேடையில் இது ஒரு சிறந்த திட்டம். மக்களுக்கு பயனுள்ள திட்டம் என்று அங்கு வீற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்காலநாதன் தெரிவித்தி ருந்தார்.

அங்கு அந்த நிகழ்வை வரவேற்ற அவர், மேடையில் இருந்து இறங்கி செல்லும் போது ஊடகங்களிடம், இது ஒரு பிரயோசனமற்ற வேலைத்திட்டம் எனக் கருத்துத் தெரிவித்தி ருந்தார். மக்களுடைய பிரச்சினைகள் தீர்க் கப்படவில்லையாம் எனக் கூறியிருந்தார்.

அந்த இடத்தில் இரண்டு பேருக்கு இருக்கிற காணிப் பிரச்சினை கூட வந்தது. அதனை உடனடியாக அந்த இடத்தில் தீர்க்க முடியாது. பிரதேச செயலாளர் ஆராய்ந்து அதற்குரிய தீர்வை வழங்க வேண்டும். அவ்வாறான பிரச்சினைகளுக்கு பிரதேச செயலாளரை தீர்வைப் பெற்றுக் கொடுக்கு மாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், 200 குடும்பங்களுக்கு மேல் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. துரித கதியில் மத்திய தர வர்க்கத்தின் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் காணி அமைச்சருடன் இணைந்து ஆராய்ந்தோம்.

அதற்கான முடிவு விரைவில் வரும். எனவே மக்களுக்கான வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. இனியும் நடை பெறும் எனவும் இதன்போது தெரிவித் துள்ளார்

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் கொள்கையை மாற்றியமை தொடர்பில் எவரும் கேள்விகேட்கவேயில்லை!

## அதன் பேச்சாளர் சுமந்திரன் கூறுகிறார்





வடக்கு, கிழக்கு மாகாணசபை தேர்தல்களில் போட்டியிடுவதில்லையென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொள்கை மாற்றப்பட்டு தேர்தலில் போட்டியிட்டமை தொடர்பில் எடுத்த முடிவுகள் தொடர்பில் யாருக்கும் எதுவும் தெரியாத நிலையே இருந்ததாக ஜனாதிபதி சட்டத்தரணியும்யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாகக் கட்சிக்குள் எந்தவித பேச்சுகளும் முன்னெடுக்கப்படாமல், எந்தவித மக்கள் மத்தியிலும் எந்த கருத்துகளும் பெறாமல் நடைபெற்றதாகவும் இதுவரையில் ஒரு பொதுமகன் கூட ஏன் கொள்கையை மாற்றினீர்கள் என்று எந்தக் கேள்வியும் கேட்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ‘அதிகாரப்பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் நோக்கு நிலை’ என்னும் தலைப்பிலான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்:- தமிழ்பேசும் மக்களின் ஐக்கியமும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பில் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், இராஜதந்திர நோக்கு நிலையில் தமிழர் அரசியல் எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் யதீந்திராவும் கிழக்கு மக்களின் இருப்பும் அரசியல் அணுகுமுறைகளும் எனும் தலைப்பில் த.வசந்தராசாவும் மற்றும் அறிவாந்த சமூகமும் அரசியல் இருப்பும் தொடர்பாக வா.குணாளனும் உரையாற்றிய அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

களநிலைமைகளுக்கு ஏற்றாற்போல் எமது கொள்கைகளில் மாற்றம் ஏற்படுவது சகஜம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

# மின்தடையை இல்லாமல்செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன!

## நிதி அமைச்சர் பஸில் தெரிவிப்பு



எதிர்வரும் ஐந்து நாள்களின் பின்னர் மின்தடை செய்வதை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ரயில் திணைக்கள களஞ்சியசாலைகளிலும் எரிபொருளை சேமிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பணம் அனுப்புவதை குறைத்த புலம்பெயர் தொழிலாளர்கள்!

## 13 ஆண்டுகளின் பின் ஏற்பட்டுள்ள மாற்றம்

கடந்த 13 ஆண்டுகளில் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து மிகக் குறைந்த பணம் அனுப்பும் மதிப்பு 2022 ஆம் ஆண்டு ஜனவரி பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, ஜனவரி 2022 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணம் 25.92 கோடி அமெரிக்க டொலராகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2021 ஜனவரி மாதம் பெறப்பட்ட 64.53 கோடி அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இது 61.6 வீதம் குறைவா கும். 2021 டிசெம்பரில் வெளி நாட்டுப் பணியாளர்கள் அனுப்பிய பணம் 32.5 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

2020 டிசெம்பரில் 81.3 கோடி அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது வெளிநாட்டுப் பணம் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் ஒப்பிடும்போது 60 வீதம் குறைவாகும்.

ஒட்டுமொத்த அடிப்படையில், 2020 இல் 710.4 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணம் 22.7 வீதம் குறைந்து 2021 இல் 549.1 கோடி அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபாவை செலுத்துமாறு கோரியுள்ளதாக தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால சில்வா கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 30 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் பெண் வட்டுக்கோட்டையில் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை தெற்குப் பகுதியில் 30 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் 35 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்களான சிவமயூரன் மற்றும் யோமல் பண்டார ஆகியோரது விசேட சுற்றிவளைப்பில் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் உட்பட ஐவர் கசிப்பைப் பொதி செய்துகொண்டிருந்தனர். இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்றவேளை, ஏனைய நால்வரும் தப்பிச் சென்ற நிலையில் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மூவாயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளோம் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பதவிக்காலம் நீடிப்பு

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. ஞானசாரதேரர் தலைமையில் ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டது.

இந்த ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நிறைவடையவிருந்த நிலையில், பதவிக்காலத்தை ஜனாதிபதி மேலும் மூன்று மாதங்களுக்கு நீடித்துள்ளார். அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இவ்வாறு பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி வேண்டி ஜெனிவா நோக்கி புறப்பட்ட எம்.பிக்கள்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நீதி வேண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுநாணயக்கார ஆகியோர் ஜெனிவா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இந்த விடயம் பற்றி முறைப்பாடு செய்ய உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சனுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு சர்வதேச ரீதியில் அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் ஜெனிவா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

# இலங்கையிலுள்ள உக்ரைன் சுற்றுலாப் பயணிகளின் விசா காலத்தை நீடிப்பது தொடர்பில் அவதானம்

இலங்கைக்கு வருகை தந்துள்ள உக்ரைன் சுற்றுலாப் பயணிகளுக்கான விசா காலத்தை நீடிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பிலானயோசனை அமைச்சரவைக்கூட்டத்தில்சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு, குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன் கலந்துரையாடி வருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப்பயணிகளுக்கான விசாக்கள் குறைந்தது ஒரு மாத காலத்துக்கு வழங்கப்படுவதால், தற்போது நாட்டில் தங்கியுள்ள உக்ரேனியர்களுக்கான விசா காலாவதியாகும் திகதியைக் கருத்தில்கொண்டுதேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் எனவும்அமைச்சர் தெரிவித்துள்ளார். சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கூற்றுப்படி, தற்போது இலங்கையில் சுமார் 4 ஆயிரம் உக்ரேனிய சுற்று லாப் பயணிகளும், சுமார் 11 ஆயிரத்து 500 ரஷ்ய சுற்றுலாப் பயணிகளும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# உக்ரைன் நாட்டில் இருந்து இலங்கையர் வெளியேற்றம்!

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

உக்ரைன் - ரஷ்யா போர் தீவிரமடைந்ததை அடுத்து உக்ரைனில் உள்ள இரண்டு மாணவர்கள் உட்பட சுமார் 40 இலங்கைப் பிரஜைகளை உக்ரைன் - போலந்து எல்லை வழியாக வெளியேற்றும் பணியில் வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

உக்ரைனின் தற்போதைய நிலை தொடர்பாகத் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், வெளியேற்றும் செயல்முறையை எளிதாக்குவதை உறுதி செய்வதற்காக வார்சாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வளங்களை வழங்குவதை அமைச்சகம் பலப்படுத்தியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அங்காரா மற்றும் வார்சாவில் உள்ள இலங்கைத் தூதுவர்கள் உக்ரைனை விட்டு வெளியேறும் இலங்கைப் பிரஜைகளுடன் தொடர்ந்து நெருங்கிய தொடர்பைப் பேணி வருகின்றனர்.

உக்ரைனுடன் நில எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளின் நிலையை கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் அங்கீகாரம் பெற்ற தூதரகங்கள் அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் இலங்கைப் பிரஜைகளுடன் தொடர்பில் இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பெலாரஸில் உள்ள எட்டு பல்கலைக்கழகங்கள் , உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் 1,556 மாணவர்கள் உட்பட சுமார் 1,600 இலங்கைப் பிரஜைகளுடன் மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகம் தொடர்ந்து நெருங்கிய தொடர்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதுவர், இலங்கை மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக அதிகாரிகள், மாணவர் மற்றும் பெற்றோர் குழுக்களுடன், பெலாரஸில் உள்ள பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நேரடித் தொடர்பில் உள்ளார்.

அவசியமாகக் கருதப்படும்போது, வழக்கமான நிலை புதுப்பிப்புகள் பெற்றோருக்கு வழங்கப்படுகின்றன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால், பிராந்தியத்தில் உள்ள இலங்கைப் பிரஜைகள் சம்பந்தப்பட்ட இலங்கைத் தூதரகங்களுடன் நெருங்கிய தொடர்பில் இருக்குமாறு அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

## பாலசுந்தரம் படுகொலை செய்யப்பட்ட வழக்கு; வியாழேந்திரனின் மெய்க்காவலரின் மறியல் நீடிப்பு



இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுசம்பவம்தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வீட்டு வாசலுக்கு முன்பாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் நீதிமன்றில் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்த நீதிவான் -

அந்த அறிக்கையில் உள்ள திருத்தங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து இது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் வழக்கில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கு விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளமையுடன் கைது செய்யப்பட்டுள்ள மெய்ப்பாதுகாவலரின் விளக்கமறிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குக கல்முனை மாநகர சபையில் பிரேரணை!

இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அமுலிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 47 ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற போதே இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை மாநகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் சமர்ப்பித்திருந்தார். இதனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான சட்டத்தரணி ஆரிகாகாரியப்பர் வழிமொழிந்தார். இதையடுத்து மாநகர முதல்வர் உட்பட உறுப்பினர்கள் பலரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கருத்துரைத்தனர்.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி எவ்வித குற்றமும் இழைக்காத அப்பாவி தமிழ், முஸ்லிம் இளைஞர்களும் புத்திஜீவிகளும் கைது செய்யப்பட்டு, வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர் என்று இதன்போது அவர்களால் சுட்டிக்காட்டப் பட்டது. அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.எம்.நிஸார் இந்தப் பிரேரணைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நிலையில், சபைக்கு சமுகமளித்திருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## மேய்ச்சல் நிலப் பகுதிகளில் தீப்பரவல்; கால்நடைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு



திம்புல்ல பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் உள்ள மேய்ச்சல் நிலப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக அப்பகுதியில் அமைந்துள்ள கால்நடை பண்ணையில் உள்ள கால்நடைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொட்டகலை பகுதியில் அமைந்துள்ள கால்நடைகளை மேய்ச்சல் செய்வதற்கும் அவற்றுக்குத் தேவையான புற்கள் மேற்படி பகுதியிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் திங்கட்கிழமைமாலை4மணியளவில் திடீரென மேய்ச்சல் நிலப்பகுதியில் தீ ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த பகுதியில் புற்தரைகள் தீக்கிரையாகியுள்ளன. எனவே, எதிர்காலத்தில் கால்நடைகளுக்குப் போதியளவு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். மேற்படி பிரதேசத்தில் கடும் காற்றுடன் வறட்சியான காலநிலை நிலவுவதால் தீ மிக வேகமாகப் பரவி வருவதுடன் தீயைக் கட்டுப்படுத்துவதற்கும் முடியாதுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக வறட்சியான காலநிலையையடுத்து பல புற்தரைகள் தீயால் எரிந்து நாசமாகியுள்ளன. இதனால் பாற்பண்ணையாளர்கள் தங்களது கால்நடைகளுக்குத் தேவையான புற்களை தூர பிரதேசங்களுக்கு சென்று சேகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புற்தரைகள் மற்றும் மேய்ச்சல் நிலங்களைதீவைப்பதன்காரணமாக பசும்பால் உற்பத்தியும் குறைவடையக்கூடிய நிலை காணப்படுகின்றது.

அந்தப் பகுதியில் தீப்பரவலானது வீதியில் சென்ற நபர் ஒருவர் சிகெரட் குடித்துவிட்டு அதன் தீபொறியை கவனமின்றி வீசி எரிந்ததன் காரணமாக பரவியிருக்கலாம் எனப் பாதுகாப்பு பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

# இயற்கை உரங்களை பயன்பருத்துவது தொடர்பில் விழிப்புணர்வுகள் அவசியம்!

## கிளி. அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

பயிர்ச்செய்கைகளின் போது இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் நிறையவே நன்மைகள் உள்ளன. இது தொடர்பில் அனைவருக்கும் விழிப்புணர்வுகள் அவசியமாகும் என்று கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிராம மட்டங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மத்தியில் இயற்கை உரப் பயன்பாடுகள் தொடர்பிலும் அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பிலும் மேலதிகாரிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

இயற்கை உரப் பாவனையால் ஏற்படக் கூடிய நன்மைகள் பற்றி நாங்கள் சிந்திப்பதில்லை. இரசாயன உரங்களால் புதிய புதிய நோய்கள் ஏற்படுகின்றன.

இதற்கான மருத்துவத் தேவைகளை அரசாங்கமே செய்ய வேண்டியுள்ளது.





இது நமது நாட்டினுடைய பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இயற்கை உரப் பயன்பாடு என்பது ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளதாகவே குறிப்பிடப்படுகின்றது. இதனால் மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன நன்மைகள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

மாற்றங்களைக் கொண்டு வரும் போது கஷ்டங்கள் இருக்கலாம். அதனால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன என்பதை உணர வேண்டும். கடந்த போகத்தில் சேதனப் பசளைகள் பயன்படுத்துவதற்கு உரிய காலத்தில் கிடைக்காமல் போயிருக்கலாம் அல்லது கால தாமதங்கள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் இனி வரும் காலங்களில் அவ்வாறு இல்லாமல் முன்கூட்டியே சேதனப் பசளை பயன்படுத்தி உரிய காலத்துக்கு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் போது ஒரு மாற்றத்தை நோக்கி முன்னேறலாம். ஆகவே அதனைப் பயன்படுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

கிளிநொச்சி மவட்ட விவசாய குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருலிங்கநாதன் மற்றும் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர்கள், உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## ஜெனிவாத் தீர்மான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா.மனிதஉரிமைகள்கவுன்ஸிலின் 49ஆவது கூட்டத்தொடரில் நேற்று இடம்பெற்ற உயர்மட்ட அமர்வில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர், இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடாது என்பதில் தமது அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ந. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையிடல் மற்றும் அது குறித்த விவாதங்கள் இடம்பெறவுள்ள நிலையில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டப் பிரிவில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உரையாற்றியிருந்தார்.

அவர் தனது உரையில் எமது நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு வந்து 43 வருடங்களின் பின்னர், தற்போது தமது அரசாங்கம் அதனை மறுசீரமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மறுசீரமைப்புகளின் போது கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்ற விடயத்திலும், விசாரணைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்திலும் தமது அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எமது நாட்டின் அனுமதியின்றி மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட 46/01 இலக்கத் தீர்மானத்தில் உள்ளடக்கபட்ட விடயங்களால் பாதகமாக நிலைவரங்கள் ஏற்பட்டுள்ளன எனவும்விமர்சனத்தைவெளியிட்டிருந்தார்.

குறிப்பாக அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்த சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறை குறித்த விசனத்தையும் அவர் வெளியிட்டார்.

அத்துடன் இவ்வாறான பொறிமுறைகளால் நல்லிணக்க முயற்சிகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, இனங்களுக்கு இடையில் இருக்கும் கடந்த கால கசப்புக்களும் ரணங்களும் மீண்டும் கிளறப்படுகின்றன எனவும், அதன் மூலம் சமூகங்கள் பிளவுபடுத்தப்பட்டு, வெறுப்புணர்வு வளர்க்கப்பட்டு, துருவமயப்படுத்தப்படுகின் றன எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். (உ)

## இலங்கை மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறையவில்லை என்பது புலப்படும். தொடர்ச்சியாக அந்த அழுத்தம் இருந்து கொண்டேதான் இருக்கின்றது.

இந்தத் தடவையும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள சில நாள்களுக்கு முன்னதாக ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் மிக மோசமான போர் ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்த சமாச்சாரங்களைக் கவனிக்க வேண்டியது அனைவரின் கடப்பாடு ஆகும். அதனால், அப்படியான சந்தர்ப்பத்தில், இலங்கைத் தமிழ் விவகாரம் கவனிப்பாரற்றுப் போய்விடுமோ என்ற சந்தேகம் எழுந்தது.

ஆனால் இந்தத் தடவையும் மிகக் கடுமையான அறிக்கை ஐ.நா. உயர்ஸ்தானிகரிடத்திலிருந்து வந்திருக்கின்றது. எதிர்வரும் 3ஆம் திகதி (நாளை) இது தொடர்பான கலந்துரையாடல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இடம்பெறவுள்ளது. ஆகயைால் உக்ரைனில் கடுமையான போர் நடந்துகொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்திலும் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கவனம் சற்றும் குறையாமல் தொடர்ந்தும் இருக்கின்றது.

இது சிறந்த விடயம்.நாங்கள் அனைவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் – யுத்த்தின் கொடூரத்தைப் பட்டுணர்ந்தவர்கள் என்ற வகையில் – உக்ரைனில் இடம் பெறுகின்ற போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுக்கின்றோம். எல்லா நாடுகளும் விடுக்கின்ற கோரிக்கையாக இருந்தாலும் கூட, 12 வருடங்களுக்குப் பிறகும் யுத்தக் கொடுமையை, அதன் பாதிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் என்ற வகையில், உலக தரப்பில் ரஷ்யாவிடமும் இந்தப் போரை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கையை முன்வைக்கின்றோம். – என்றார்.

## சர்வஜன வாக்கெடுப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடிதம் எழுதியமை தொடர்பாக வல்வெட்டித்துறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை ஜெனிவாவிற்கு தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய 5 கட்சிகள் கூட்டாகத் தமிழர் பிரச்சினையை தீர்க்க வடக்கு, கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி கடிதத்தை எழுதியுள்ளன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி போன்றவை இதுவரை சர்வதேச சமூகத்திடம் பொதுசன வாக்கெடுப்புத் தேவை என்ற விடயத்தை வலியுறுத்தவில்லை. இந்நிலையில் தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் தனியாக ஜெனிவாவுக்கு கடிதத்தினை அனுப்பியுள்ளோம். ஒரே நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்குமானால் ஜெனிவாவுக்கு பல்வேறு கடிதங்கள் போக வேண்டிய தேவையிருக்காது.

இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒரு போதும் கிடையாது. ஒற்றையாட்சியை விட்டு ஓர் அங்குலமும் அரசாங்கம் வழங்காது. அரசியல் தீர்வு வழங்கப்படும், ஆனால் கூட ஒற்றையாட்சி மூலம் அதிகாரப் பகிர்வை மலினப்படுத்துவதாகவே அந்தத் தீர்வு இருக்கும்.

சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். அதுவே அரசியல் தீர்வுக்கான வழி என்பதை நாங்கள் இறுக்கமாக வலியுறுத்தி இருக்கின்றோம். – என்றார்.

## ‘வைக்கியூம்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவுக்கான உக்ரைன் தூதுவர் ஒக்சானா மர்கரோவா தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இருந்து கிடைக்கும் இராணுவர் தகவல்களை அடிப்படையாக கொண்டு, தூதவர் இதனை கூறியுள்ளார். vacuum குண்டுகளை Thermobaric ஆயுதம் அல்லது உஷ்ண குண்டுகள் என அழைப்பார்கள்.

இந்த குண்டுகள் வெடிக்கும் போது வெடிக்கும் இடத்தில் உள்ள ஒக்சிஜன் உறிஞ்சப்படும். ஒக்சிஜன் உறிஞ்சப்படும் போது ஸழிஉற்றதுஉருவாகும். இதன் காரணமாக இதனை vacuum குண்டுகள் என அழைக்கின்றனர். இந்த குண்டு வெடிக்கும் ஒக்சிஜன் உறிஞ்சப்பட்ட இடங்களை நோக்கி தீ பரவும், பேரதிர்வும் பெருநாசமும் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

ஜெனிவா இணக்கப்பாடுகளுக்கு அமைய இப்படியான vacuum குண்டுகளை போர்களில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அப்படியான பாவனை ஐ.நா. உடன்பாடுகளின்படி யுத்தக் குற்றமாகும்.

ரஷ்யா, உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு போரை கடந்த 24 ஆம் திகதி ஆரம்பித்தது. போர் ஆரம்பித்து நேற்று ஆறு நாள்கள் நிறைவடைந்துள்ளன.

எனினும் ரஷ்யா இதுவரை தாக்குதல்களை நடத்த பாரம்பரியமான ஆயு தங்களையே பயன்படுத்தி வந்தது. vacuum குண்டுகள் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் ரஷ்யா தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை.

## உக்ரைன், ரஷ்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக அவர்களிடமிருந்து எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

11,463 ரஷ்யா சுற்றுலாப் பயணிகளும், 3,993 உக்ரைன் சுற்றுலாப் பயணிகளும் தற்போது இலங்கையில் தங்கியிருக்கின்றனர்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளால் அவர்களுக்கு மீண்டும் தமது நாடுகளுக்குச் செல்வதற்கு சிரமங்கள் தோன்றியுள்ளன.

அதனால், நிலவுகின்றசூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த சுற்றுலாப் பயணிகளின் விசாவுக்கான காலப்பகுதியை கட்டண அறவீடுகள் இன்றி 02 மாத காலத்திற்கு நீடிப்பதற்காக சுற்றுலாத் துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வட்டுவாகல் கடற்படைத் தளத்திற்கான காணிசுவீகரிப்பு நடவடிக்கை மும்முரம்



முல்லைத்தீவு – வட்டுவாகல் கடற்படை தளத்திற் கான காணிசுவீகரிப்பு நடவடிக்கை தொடர்ந்து முன் னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் சிலர் காணிகளை அரசிற்கு வழங்குவதற்கு முன்வந்துள்ள நிலையில் மற்றும் பலர் காணிகளை வழங்க விரும்ப மின்மையினையும் எதிர்ப்பினையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வட்டுவாகல் கடற்படைத்தளத்திற்காக 671ஏக்கர் காணி கையகப்படுத்த கோரப்பட்டுள்ளது. இதில் 292 ஏக்கர் அரச காணிகளாக காணப்பட்டுள்ளந. ஏனைய 379 ஏக்கர் தனியார் நிலமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு 35 பேருக்கு சொந்தமான 379 ஏக்கர் காணியில் சிலர் காணி சுவீகரிப்பிற்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முன்வந் துள்ளார்கள். பலர் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

2014 ஆம் ஆண்டு வட்டுவாகல் கடற்படை தளத்தின் கணிசுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தலின் படி தொடங்கப்பட்ட சுவீகரிப்பு நடவடிக்கை, பிரிவு 5 சட்டத்தின் கீழ் நில அளவீடு முன்னெடுக்கப்பட்ட போதும் உரிமையாளர்கள் பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

காணி உரிமையாளர்கள் 23 பேர் இவ்வாறு காணிகளௌ வழங்க விரும்பம் இல்லாமல் கடந்த காலங்களில் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இருந்தும் காணியினை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ செயலணி பதவிக்காலம் 3 மாதங்கள் நீடிப்பு!

‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மேலும் மூன்றுமாதங்களுக்குநீடிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய பொதுமக்கள் மற்றும்நிபுணர்கள் குழுவின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவே செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ தொடர்பான ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டு அதற்கு தலைவராக ஞானசார தேரரை ஜனாதிபதி நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள், மின்சாரம் கேட்டு நாடு முழுவதிலும் போராட்டம்



தற்போது இலங்கையில் ஏற் பட்டுள்ள எரிபொருள் நெருக் கடிக்குத் தீர்வு காணக் கோரி நாடு முழுவதும் பல முக்கிய நகரங்களில் தொடர் போராட்டங்களை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஏற்பாடு

‘மக்கள் அவதியுறும் எண்ணெய் மற்றும் மின்சார நெருக்கடிக்கு உடனடி தீர்வு’ என்ற தொனிப்பொருளில் தொடர் போராட்டம் நடத்தப்படுகிறது.

கொழும்பில் நேற்று ஆரம்பமான இந்தத் தொடர் போராட்டம் களுத்துறை, பாணந்துறை, கம்பஹா, புத்தளம், கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மொனராகலை, மாத்தளை, அனுராதபுரம், அம்பாறை, குருநாகல் ஆகிய இடங்களிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 296

**745.சேகர் எவற்றைக் கூறினார்?**

சேகருடனான அப்போதைய பழக்கம் ஊரவர் என்பதாலும், உறவினர்களது பள்ளித்தோழர், அவர்களின் வீடுகளில் சஞ்சரித்தவர் என்பதாலும் இருந்தது. எனக்கு ஏழெட்டு வயது மூத்தவர். அவரது தந்தையார் மலேயாவில் தொழில் பார்த்துத் திரும்பியிருந்தவர். சேகரை தமிழ் நாட்டுக்குப் படிக்க அனுப்ப, அங்கு அவற்றை முடிக்காமல், அறிஞர் அண்ணாவின் கருத்துக்களால் கவரப்பட்டு, அவரின் தோழர்கள் சிலருடன் நட்புகள் பேணிக்கொண்டு திரும்பி, ஊரிலேயே சிறுதொழில் நடத்திக் கொண்டிருந்தார்.

பொதுவாகவே உரும்பிராயில் தமிழரசுக்கு ஆதரவு அதிகம். சேகரும் அதற்கு ஆதரவாக இருந்தவர்.

பின்னாளில் சேகர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக இயங்கினார். 1977 – 1980 காலங்களில் நான் யாழ்ப்பாணம் வரும் வேளைகளில் பிரபாகரனையோ அன்றில் அவர் நியமிக்கும் ஒருவரையோ சந்திப்பதென்றால் அந்தச் சந்திப்பு அனேகமாக சேகரின் வீட்டில்தான் நடக்கும்.


காரில் அவருடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு அன்று சென்ற அந்தப் பயணத்தின் போது சேகருக்கு ஆரம்ப காலத்தில் இயங்கிய இளைஞர்களுடன் உறவுகள்



சிவகுமாரன் சமாதி

இருந்தமையை நான் அறிந்திருக்கவில்லை. அது எவ்வளவு ஆழமானது, நோக்கங்கள் என்ன என்பதை அறியும் ஆர்வமும் எனக்கு அப்போது இருக்கவில்லை. ஆனாலும் சேகர் கூறியவற்றை உன்னிப்பாக ஏனோ என்னை அறியாமல் கணக்கெடுத்துக் கொண்டேன்.

சிவகுமாரன் தன்னால் இயலாத கட்டத்தில் பிடிபட்டு மற்றவர்களைக் காட்டிக் கொடுக்க விரும்பாமல் சயனைட் அருந்தி சாவைத் தழுவிக் கொண்டாலும் அது தவிர்த்திருக்கக் கூடிய ஒன்றுதான். தமிழரசுக்காக ஓடி ஓடி உழைத்தவன். அவனது வீட்டில் கூட தமிழரசுக் கொடி பறந்தது. ஆனால் அவனது தலைமறைவு வாழ்க்கையின் போது அவனுக்கு நெருக்கடியாக வலைவிரிக்கப்பட்ட தேடுதலுக்கு ஆளானபோது தமிழரசு தலைவர்கள் எவரும் அவனுக்குக் கைகொடுக்கவில்லை. தந்தையார் இங்கிலாந்துக்கு அனுப்ப எவ்வளவு தெண்டித்தும் விடாப்பிடியாக மறுத்து, தலைமறைவாக கொஞ்ச காலம் தமிழ் நாட்டில் இருந்து தேசிய இயக்கப் பணிகளில் மறைவாக ஈடுபடலாம் என முயற்சி செய்தபோது, அதற்கான சிறிய தொகையைக் கூட தமிழரசாரிடம் இருந்து



தமிழினத்தின் முதல் தற்கொடையாளன்
வீரன் சிவகுமாரன்
05.06.1974

பெற்றுக்கொள்ள முடியவில்லை. நாடாளுமன்ற அங்கத்தினர்கள் கூட இன்று தருகிறோம், நாளை தருகிறோம் என்று சொன்னவர்கள்தான். எதுவும் செய்யவில்லை. பொலிஸாரின் வலைவிரிப்பு இறுக சிவகுமாரனும் அவரது நண்பர்களும் இந்த வங்கிக் கொள்ளையை நடத்தி, அதனைக் கொண்டு தமிழ்நாடு போகத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அதுவே வினையாகிவிட்டது.

'இந்தத் தமிழரசுத் தலைவர்களோடு பார்க்கும் போது தமிழனுக்கு என்று உதவ முன் வந்த வைத்தியர் சத்தியநாதன் போன்றோரைப் பார்த்தீர்களா? அவருக்கும் மற்ற வைத்தியர்களுக்கும் சிவகுமாரனைத் தெரியாது. அப்படியிருந்தும் துடித்துப் போனார்கள். அது உணர்வு. ஆனால் தமிழரசுத் தலைவர்கள் நடத்துவது அரசியல். ஆனால் வேறு வழியில்லாமல் மெல்லவும் விழுங்கவும் இயலாமல் தமிழ் மக்கள் இவர்களை தலைவர்களாக வைத்துக் கொண்டாடுகின்றார்கள்' – என சேகர் சொன்னார். சிவகுமாரன் ஒரு நல்ல அர்ப்பணிப்புள்ள தலைவனாக உருவாகியிருப்பான். ஆனால் அவன் போன்றவர்களை உள்வாங்காது தங்களது இருப்புக்களுக்குப் போட்டியாக வரலாம் என்று காலத்துக்கு முந்தியே அனுப்புகிறது இந்தத் தமிழரசு. அது அவர்களின் தலைவர்களின் சுயநலம் தான் என சேகர் பொருமினார்.

இவனது மரணம் எழுப்புகிற உணர்ச்சிகளை ஆஸ்பத்திரியில் திரளுகின்ற இளைஞர்களால் பார்க்கிறீர்கள். இனிப் பாருங்கள். தமிழ் மக்கள் அவனுக்காக எடுக்கும் அஞ்சலி கூட்டங்களில் முன்னுக்கு நிற்பார்கள். ஆனால் பொறுப்பெடுத்து ஒன்றையும் நடத்தமாட்டார்கள். அவனது மரணம் ஓர் அரசியல் எழுச்சிக்கான அத்திவாரமாக வரும் என அவர்கள் கணக்குப் போடுவார்கள். தலைமறைவாகத் திரிந்த சிவகுமாரனைக் கண்டு கொள்ளாதவர்கள், அவன் தங்களது வெள்ளை வேட்டிக் கோலத்திற்குக் கஷ்டம் தருகிறான் என எண்ணி விலத்தியவர்கள், அவனது பூதவுடலைத் தூக்கி சுமந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார் சேகர்.

அவ்வளவு நாட்டங்கள் அரசியலில் எனக்கு இல்லாததால் இந்த ஏமாற்றங்களின் – பம்மல்களின் – அத்திவாரங்கள் என்னைப் பாதிக்கவில்லை.

ஆனால், எனது மனத்திரையில் தனது சேர்ட் கொலரைத் தூக்கிகாட்டி ஓர் உணர்ச்சித் தாக்கத்தைத் தந்த அவனது முகமே நின்றது. இவ்வளவு சிறிய காலத்தில் தனது உயிரைத் தமிழுக்குத் தந்துவிட்டு சென்றுவிட்டானே என்ற பச்சாதாபம் மேலோங்கியது. ஆனால் அவனது மரணச் சடங்கில் சேகர் கூறியவையே நடந்தன.

**746.சிவகுமாரனின் இறுதி யாத்திரை எப்படியாக அமைந்தது?**

அவனது இறுதி ஊர்வலத்தை இளைஞர்கள்தான் பொறுப்பெடுத்து இணைந்து நடத்தினார்கள். பின்னர் அதற்குப் பொறுப்பாயிருந்த முக்கியஸ்தர்கள் பாலா, புஷ்பராஜா, வரதராஜப்பெருமாள், வள்ளி, அற்புதம், பிரான்சிஸ், குலம் என அறிந்தேன். பிற்காலங்களில் இவர்கள் இயக்கங்களில் சேர்ந்து இருந்தார்கள். உரும்பிராயில் இருந்த வேம்பன் மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிவழிகளில் சென்றனர். பெண்கள் பலரும் வழமைக்கு மாறாக மயானத்திற்குச் சென்று அங்கு நின்று ஒப்பாரி வைத்து அழுதார்கள். தாங்கள் கடைசி நேரத்திலும் சிவகுமாரனின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்று கூக்குரலிட, பெட்டியில் அடைக்கப்பட்ட உடம்பை மீண்டும் திறந்து காட்டுவதில்லையென்றாலும் சனக்கூட்டத்தின் விருப்பத்திற்கு இணங்கி அதனை ஒரு வானின் உச்சியில் ஏற்றி, நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் தாங்கிப் பிடிக்க, மற்ற நாடாளுமன்ற அங்கத்தினரும் முண்டு கொடுக்க மக்களுக்கு அது காண்பிக்கப்பட்டது.

சிவகுமாரன் இருக்கும் போது ஒரு புதிய வழியைக் காட்டினான். போன பின்னரும் அவன் புதிய வழிமுறைகளை எழுதிச் செல்கிறான் என மனதில் வைராக்கியம் பதிந்த இளைஞர்கள் சொல்லக் கேட்டேன்.

அவனது இறுதிச்சடங்கில் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினத்துடன் ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் இரத்தினம், பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை, அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் போன்றோர் கலந்துகொண்டனர்.

அமிர்தலிங்கத்தின் அறிக்கையில் அகிம்சை மார்க்கத்தில் நம்பிக்கை கொண்ட எம்போன்றோர் சிவகுமாரனின் வழியை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவரது உண்மைத் தொண்டையும் தியாகத்தையும் பாராட்டி, மதிப்பிட முடியாத அவரது வீரத்தின் முன் தலைவணங்கி நிற்கிறோம் என்று குறிப்பிட்டார்.

வேம்பன் மயானத்தில் இந்து முறைக்கு மாறாக சிவகுமாரனுக்கு ஒரு சமாதி கட்டப்பட்டது. அவனது பெயர் பொறிக்கப்பட்டு வருடா வருடம் குடும்பத்தினரும் இளைஞர்களும் அவரது ஆத்ம சாந்திக்காக தீபமும் மலர்களும் வைப்பது வழமை. அரசியல் பிரசாரக் கூட்டங்களுக்குச் செல்லும் இளைஞர்கள் பேரணிகள் அவனது சமாதிக்கு அஞ்சலி செலுத்தி தமிழ் ஈழமே இனி எமது இறுதி முடிவு எனக் கோங்கள் போட்டு, ஊர்வலங்களில் சென்றவர்களில் எத்தனை பேர் கடைசி நாள்களில் முள்ளிவாய்க்காலில் நின்றார்களோ, என்னவானார்களோ என்பது புரிந்து கொள்ளப் படக்கூடியதல்ல.

(வளரும்)



சுதந்திரன்
SUTANTIRAN
Thamilviews
Thank you: Nithy Annar France
'மீண்டும் பிறப்பேன்
விடுதலைக்கு
போரிடுவேன்'
மாரன் வீரமரணம்
சாநெஞ்சன்' சிவகுமாரனுக்கு
முதாயத்தின் இறுதி அஞ்சலி!

# மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நீக்கப்படவேண்டும்!

## கடந்த ஆட்சியில் நாம் ஒன்றும் செய்யவில்லை என்பவர்களுக்கு ஞாபக மறதி அதிகம் போல!

### ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



இந்த நாட்டில் மனித உரிமைகள் பேணப்படவேண்டுமானால் – இந்த நாட்டில் மனித உரிமைகளுக்கு இடமிருக்கவேண்டுமானால் – இந்த நாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். இதற்கு அனைத்து மக்களும் குரல் கொடுக்கவேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி வடகிழக்கு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கவேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து நாடுபூராகவும் முன்னெடுத்துவரும் கையெழுத்துப்போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பற்றித் தமிழ்ச் சமூகத்துக்கு எவரும் எதுவும் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. இந்தச் சட்டத்தின் கீழ் கூடுதலாக கஷ்டங்களை அனுபவித்தவர்கள் தமிழ் மக்கள் சிங்கள இளைஞர்களும் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் இந்த சட்டத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். நான் சட்டத்தரணியாக அவர்கள் சார்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பல வழக்குகளில் ஆஜராகியுள்ளேன்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று இருந்தாலே ஒருவர் தனக்கு எதிரான சாட்சியமாக அதனை கொடுத்துவிடமுடியும். இந்தச் சட்டத்தில் உள்ள பிரதான ஆட்சேபனைக்குரிய விடயம் அதுதான். பொலிஸார் எந்தவித விசாரணையும் செய்யவேண்டிய அவசியம் கிடையாது. ஒருவரைச் சித்திரவதை செய்து குற்ற வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டால் அந்தக் குற்றத்தை அவர்கள் தீர்த்துவிட்டதாகக் கருதப்படும், அவருக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்புக் கொடுக்கப்படும்.

இவ்வாறு பல விடயங்கள் காணப்படுகின்றன. காலவரையறையின்றி ஒருவரைத் தடுத்துவைத்திருக்க முடியும். இந்த ஏற்பாட்டைத் தவிர 18 மாதங்கள் தடுத்துவைப்பதை 12 மாதங்களாகக் குறைக்கப்போவதாகத் தெரிவிக்கின்றனர். இந்த 18 மாதங்கள் என்பது நீதிமன்ற உத்தரவு இல்லாமல் ஒருவரைத் தடுத்துவைத்திருக்கும் காலமாகும். ஆனால் அவரை நீதிமன்றில் நிறுத்திவிட்டால் நீதிவானுக்கு இருக்கும் ஒரேயொரு அதிகாரம் அவரை விளக்கமறியலில் வைப்பதுதான்.

வழக்கு முடியும் வரையில் அவரை விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்று பிரிவு 07 சொல்கின்றது. ஆகையால் 18 மாதங்களை 12 மாதங்களாகக் குறைத்துவிட்டால் எதுவும் மாறப்போவதில்லை. 12 மாதங்களுக்குள்ளே அவரை நீதிவானுக்கு முன்பாக நிறுத்தினால் காலவரையறையின்றித் தடுத்துவைக்கமுடியும்.

தற்போது மேல்முறையீட்டு நீதிமன்றில் பிணை கோரிக்கை வைக்கலாம் என்ற புதிய திருத்தம் கொண்டுவந்துள்ளார்கள். ஆனால் மேலும் முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கமுடியும் என்று கூறப்பட்டுள்ளதற்கு கீழாக மேலும் முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கிய பிறகு அதற்கு கீழ் உள்ள மேல் நீதிமன்றம் மீண்டும் அவரை விளக்கமறியலில் வைக்கமுடியும் என்றுதான் அதில் சொல்லப்பட்டுள்ளது.

உலகத்தில் எங்கும் இவ்வாறான சட்டம் இல்லை. இவ்வாறான சட்டத் திருத்தங்களையே கொண்டு வருகின்றார்கள்.அதனால்தான் இந்தத் திருத்தம் கண் துடைப்புக்கூடக் கிடையாது என நாங்கள் கூறியுள்ளோம்.

பலர் எங்களிடம் கடந்த ஆட்சிக்காலத்தில் இதனை நீக்கக்கூடிய காலம் இருந்தது ஏன் நீங்கள் அதனை செய்யவில்லையெனக் கேட்கின்றனர். அவ்வாறு கேட்கின்றவர்களுக்கு ஞாபக மறதி அதிகம். நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற அடிப்படையில் அது கொண்டுவரப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக ஒழித்து சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது கொண்டுவரப்பட்டபோதும் அதனை நாங்கள் எதிர்த்தோம்.அதிலும் மோசமான பல விடயங்கள் இருந்தன.அதனை நாங்கள் எதிர்த்த காரணத்தால் ஒரு நாடாளுமன்ற மேற்பார்வை குழுவில் இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் நடைபெற்று, நாங்கள் எதிர்த்த அனைத்து விடயங்களும் மாற்றியமைக்கப்பட்டன.அப்படியிருந்தும் வேறுசில புதுவிடயங்கள் அதிலிருந்த காரணத்தால் பலர் எதிர்த்தார்கள்,அவையும் மாற்றப்படவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருந்தோம்.

இந்தப் புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டது 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம். அது தொடர்பில் பேச்சுகள், கலந்துரையாடல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்ட விரோதமாக பிரதமரை நீக்கி மஹிந்த ராஜபக்ஷவை நியமித்த அரசமைப்புக்கு எதிரான புரட்சி காரணமாக இந்த நாடு ஸ்திரமற்ற தன்மைக்குச் சென்றுவிட்டது. அரசாங்கத்துக்கு அங்கு பெரும்பான்மையும் இருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்றவுடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கினால் எங்களால் தாக்குதலை தடுக்க முடியாது என பாதுகாப்புதரப்பினர் கோஷத்தை எழுப்பி, கடுமையான சட்டமும் கடுமையான ஆட்சியாளர்களும் வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பித்தான் அந்த சட்டமூலம் நிறைவேற்றப் படாலும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நடைபெற்றது. இந்த சரித்திரம் தெரியாதவர்கள் இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதிய சட்டமூலத்தில் குறைகள் இருக்கலாம். பல விடயங்கள் இருந்தன. நாங்கள் முயற்சி செய்தோம். முயற்சி செய்வில்லையென யாரும் கூறமுடியாது.

தற்போதுள்ள அரசும் இதற்கு முன்பிருந்த அரசுகளும் இந்தச் சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்துள்ளன. அந்த வாக்குறுதி 2017ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்டது. அது செய்யப்படவில்லையென்ற காரணத்தால் ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. சலுகையை வழங்குவதா இல்லையா என ஆராய்ந்துவருகின் றது. இந்தக் காலகட்டத்தில் நாங்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கடுமையான அழுத்தத்தைக் கொடுக்கின்றோம்.

இது தமிழ் மக்கள் மட்டும் சொல்லும் விடயமல்ல. இது நாடு முழுவதும் உள்ள ஜனநாயகத்தை மதிக்கின்ற, மக்கள் அனைவரும் சேர்ந்து எழுப்புகின்ற குரலாகவிருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாடளாவிய ரீதியில் இதனைச்செய்கின்றோம்.

ஒரு குறித்த இளைஞர் அணியை நோக்கி ஆறு மாத காலத்துக்கு தற்காலிகமானதாக கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்று 42 வருடங்களையும் கடந்து பயணித்துக்கொண்டிருக்கின்றது. இது மனிதாபிமானத்துக்கு எதிரான சட்டம், உலக ஒழுங்குகளுக்கு எதிரான சட்டம், உலக மனித உரிமைகள் – விழுமியங்களுக்கு மாறான சட்டம்.

இந்த நாட்டில் மனித உரிமைகள் பேணப்படவேண்டுமானால் – இந்த நாட்டில் மனித உரிமைகளுக்கு இடமிருக்கவேண்டுமானால் – இந்த நாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். இதற்கு அனைத்து மக்களும் குரல்கொடுக்கவேண்டும்.

இன்று சிங்கள மக்கள் பெருமளவில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடாமல் அனைத்து இன மக்களும் இணைந்து எடுக்கும் முயற்சியாக இதனை நாங்கள் முன்கொண்டு சென்று மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும்.

வெறுமனே சர்வதேசத்தின் அழுத்தங்களால் மட்டுமல்ல, இந்த நாட்டிலேயே எழுப்பப்படுகின்ற குரல் இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இதனை முன்னெடுக்கவேண்டும்.அதற்கு அனைத்து இன மக்களின் தலைவர்களின் ஆதரவை வேண்டுகின்றோம். – எனத் தெரிவித்தார்.

## நாட்டில் திரிபோஷாவிற்கும் தட்டுப்பாடு கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் கிடையாது

கைக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் களஞ்சியசாலைகளில் தற்போது திரிபோஷா இல்லைஎனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எனவே, கிளினிக்குகளுக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரிபோஷாஉற்பத்திக்கானசோளத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதகாரணத்தால்கைக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திரிபோஷாவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.




நாள்தோறும் திரிபோஷா உற்பத்திக்கு சுமார் 70 மெற்றிக் தொன் சோளம் தேவைப்படுகின்றது.

தேவையான அளவு மக்காச்சோளத்தைப் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தால், சோளத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்த போதிலும், அதுவும் முடங்கியுள்ளது. மேலும், திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான பால் மாவைப் போதுமான அளவு பெற முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டின் அரசாங்க வைத்தியசாலைகளில் 3 மாதங்களுக்குரிய மருந்துகளே உள்ளன

நாட்டில் அடுத்த 03 மாதங்களுக்குத் தேவையான மருந்துப்பொருள்களே அரச வைத்தியசாலைகள் வசமுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தனியார் பிரிவுகளுக்கு மருந்துப்பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி தொடர்பில், சம்பந்தப்பட்டதரப்பினருடன்கலந்துரையாடவுள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பரசிட்டமோல் மருந்து உற்பத்தியைத் துரிதப்படுத்துமாறு உரிய தரப்பிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பரவிவரும் நோய்கள் காரணமாக பரசிட்டமோல் மருந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நெருக்கடி காரணமாக ரயில்சேவைகள் இரத்துசெய்யப்படா!

எரிபொருள் நெருக்கடி காரணமாக எந்தவொரு ரயில் சேவையும் இரத்துச் செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில்வே சேவையின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ரயில்களுக்கான எரிபொருளை வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.03.2022இல் வெளியிடப்பெற்றது.